அசல் வழக்கு எண்: 497/2022

DEPOSITION OF WITNESS: P.W.1

| | |
|---|---|
| பெயர் | மகிமைதாஸ் |
| தந்தை பெயர் | கண்ண கவுண்டர் |
| வயது | 29 |
| கிராமம் | அருணகிரிமங்கலம் கொல்லைமேடு |
| வட்டம் | கலசபாக்கம் |
| தொழில் | விவசாயம் |

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 9th day of September 2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் 5ம் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். வம்சா வழிப்பட்டியல் **வா.சா.ஆ.1** ஆகவும் 19.09.1988ம் தேதியிட்ட கண்ணகவுண்டருக்கு டி.ஆர்.ராதாகிருஷ்ணன் ( பட்டம்மாள் மகள்) எழுதிக்கொடுத்த அசல் கிரையப்பத்திரம் **வா.சா.ஆ.2** ஆகவும் கண்ணகவுண்டர் இறப்புச்சான்று கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.3** ஆகவும் 29.05.2020ம் தேதியிட்ட வில்லங்க சான்று கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.4** ஆகவும் 02.06.2020ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.5** ஆகவும் 27.05.2020ம் தேதியிட்ட நீலாவதியம்மாள் ஏழுமலைக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் கணினி பதிவிறக்க சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகவும் 27.05.2020ம் தேதியிட்ட நீலாவதியம்மாள் தாமரைச்செல்விக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் கணினி பதிவிறக்க சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆகவும் 27.05.2020ம் தேதியிட்ட நீலாவதியம்மாள் வேண்டாமிர்தத்துக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் கணினி பதிவிறக்க சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆகவும் 27.05.2020ம் தேதியிட்ட நீலாவதியம்மாள் ராதாவுக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் கணினி பதிவிறக்க சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆகவும் நீலாவதி அம்மாள் பெயரில் உள்ள சிட்டா கணினி பதிவிறக்க நகல் ( பட்டா எண் 402) **வா.சா.ஆ.10** ஆகவும் 02.06.2020ம் தேதியிட்ட மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய புகாரின் நகல் **வா.சா.ஆ.11** ஆகவும் தாவா மதிப்பீட்டு விவரம் கணினி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்ய வேண்டுகிறேன். ( வா.சா.ஆ.11 பொய் புகார் என பிரதிவாதி வழக்கறிஞர் தனது ஆட்சேபணையை

தெரிவித்தார். அவரது ஆட்சேபணையுடன் வா.சா.ஆ.11 ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது) பிராதுபடி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |